**கிரிக்கெட் எய்ட் (உத்தரவாதத்தினால்) வரையறுக்கப்பட்ட கம்பனி - 2019**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

கிரிக்கெட் எய்ட் (உத்தரவாதத்தினால்) வரையறுக்கப்பட்ட கம்பனியின் ("கம்பனி") 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் நிதி நடவடிக்கைகள் கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சம்மேளனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்வதும் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதும் எனது பொறுப்பாகும். இருந்த போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டில் நாட்பட்ட சிறுநீரக நோய் நிதி திரட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் திரட்டப்பட்ட மொத்த நிதி | 3,295,000 | அச்சிடப்பட்ட சீட்டுக்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள், சீட்டுக்களின் விலை, நிகழ்ச்சித்திட்டக் கிரயம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்டிருந்த வருமானம், நிகழ்ச்சித் திட்டக்காலம், நிகழ்வுகள் முகாமைத்துவக் கம்பனியின் தெரிவு நடைமுறை மற்றும் | கொவிட் 19 தொற்று நோய் காரணமாக ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாதிருந்தது. | திரட்டப்பட்ட மொத்த நிதியை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அவற்றின் செயற்பாடுகள், நிகழ்வுகள் முகாமைத்துவக் கம்பனிக்கான கொடுப்பனவுகள், விற்கப்பட்ட சீட்டுக்களின் எண்ணிக்கை, ஏலத்தில் விடப்பட்ட பொருட்கள். | | |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில நாட்பட்ட சிறுநீரக நோய் நிதி திரட்டும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக மேற்கொள்ளப் பட்ட மொத்தச் செலவுகள் | 12,443,706 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் , பட்டியல்கள் , வங்கி வைப்புச்சீட்டுகள், அட்டவணைகள் | கொவிட் 19 தொற்று நோய் காரணமாக ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாதிருந்தது. | நிகழ்ச்சித் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவுகளை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணககீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளகக் கணக்காய்வுக் கட்டணங்கள் ரூபா 514,653 ஆனது 2019 ஆம் ஆண்டிற்கான செலவினமாகக் கணக்கிடப்பட்டுள்ளன. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இலாபம் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளகக் கணக்காய்வுக் கட்டணங்களுக்கான விலைப்பட்டியல் அந்தந்த ஆண்டுகளின் நிதிக் கணக்குகளின் வணிகத்தை இறுதி செய்த பின்னர் பெறப்பட்டிருந்ததால், ஒதுக்கங்களை செய்ய முடியவில்லை என்பதுடன் விலைப்பட்டியல் பெறப்பட்ட ஆண்டில் அது கணக்கிடப்பட்டது. | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வுக் கட்டணங்கள் சரியாகக கணக்கிடப்படல் வேண்டும். |

### 1.5.3 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சனவரி 28 திகதியிடப்பட்ட இலங்கை இலங்கை கிரிக்கெட்டின் நிறைவேற்றுக் குழுவானது விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் செய்யப்பட்ட பரிந்துரைகளை குறித்துக் கொண்டதுடன், கிரிக்கெட் எய்ட் (உத்தரவாதத்தினால்) வரையறுக்கப்பட்ட கம்பனியின் செயற்பாட்டை நிறுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் அந்த முடிவு எடுக்கப்பட்டபோது, நிறுவனத்தின் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 5,014,680 மற்றும் மொத்தப் பொறுப்புகளின் பெறுமதி ரூபா 710,689 ஆக இருந்தது. அனைத்து பொறுப்புகளும் 2022 திசெம்பர் 30 இல் தீர்க்கப்பட்ட போதிலும், வங்கி மீதியான ரூபா 89,850 ஆனது இதுவரையில் இலங்கை கிரிக்கெட்டுக்கு மாற்றப்படவில்லை. அத்துடன், கிரிக்கெட் எய்ட் (உத்தரவாதத்தினால்) வரையறுக்கப்பட்ட கம்பனியின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட பின்னரும் கலைப்பு செயல்முறை இதுவரையில் முடிக்கப்படவில்லை. | கம்பனிப் பதிவாளருக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்கள்.்.அறவீடுகள் போன்ற கலைப்புச் செயற்பாட்டின்போது ஏற்படக்கூடிய இடைநேர்ச் செலவினங்களைச் செய்வதற்காக ஒரு மீதி தக்க வைக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீதித் தொகையான ரூபா 89,850 ஐ இலங்கை கிரிக்கெட்டின் கணக்கிற்கு மாற்றுவதற்கான காசோலையொன்று எழுதப்பட்டுள்ளது. | கலைப்பு செயல்முறையைப்பின் பற்றியதாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,496,213 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 546,017 ஆக இருந்தது. எனவே , நிதி விளைவுகளில் ரூபா 950,197 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 4,250,000 ஆல் மற்றும் மொத்தச் செலவுகள் ரூபா 3,299,803 ஆல் அதிகரித்தமையே இம்முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது.